# தூதன்

தூதன்-28 டிசம்பர் - 2019 தூது-11

உம்முடைய இரட்சணியத்தை என் கண்கள் கண்டது என்றான். லூக்கா 2:32




தென்னிந்தியத் திருச்சபை, தமிழ் சபை - துபாய்

# தென்னிந்தியத் திருச்சபை
# தமிழ் சபை - துபாய்


| | |
|---|---|
| சபை போதகர் மடல் | 01 |
| உதவி போதகர் மடல் – ஃபுஜைரா | 03 |
| உதவி ஆயரம்மா மடல் – ஃபுஜைரா | 05 |
| உதவி போதகர் மடல் – இராஸ் அல் கைமா | 07 |
| உதவி ஆயரம்மா மடல் – இராஸ் அல் கைமா | 09 |
| செயலர் மடல் | 11 |
| கிறிஸ்மஸ் மரம் | 12 |
| அன்பின் திறப்பும் ! இயேசு பிறப்பும் !! | 14 |
| நீங்கள் கிறிஸ்தவரா | 16 |
| மகிழ்ச்சி மாத சிறப்பு நிகழ்ச்சிகள் | 17 |
| அறிந்து கொள்வோம் | 18 |
| திருச்சபை ஜெபநாள் | 20 |
| நட்சத்திரம் | 22 |
| தெரிந்துகொள்வோம் | 24 |
| வேதவினா போட்டி | 26 |
| Health Tips | 28 |
| Children's Corner | 30 |
| Birthday Celebrants | 33 |
| Wedding Anniversary | 36 |
| Nazareth | 39 |



P.O.Box: 8785, Dubai. Ph: 04-2552065, 04-2249249(office), Mob: 050-5533645
Website: www. csitamilparishdubai.com, E-mail: tamilcsi@eim.ae

# சபை போதகர் மடல்

உலக இரட்சகராம் இயேசுகிறிஸ்துவின் ஒப்பற்ற திருப்பெயரில் என் அன்பின் வாழ்த்துக்கள்.

“கிறிஸ்மஸ்” இந்த வார்த்தையைக் கேட்டவுடனே குழந்தைகள் முதல் பெரியவர் வரை இனம்புரியாத மகிழ்ச்சியும் கிறிஸ்மஸ் நினைவுகளும் தானாய் நம் உள்ளத்தில் மலர்ந்திடும். இருள் விலகி ஒளி பிறந்த நாள். குறைவுகள் மறைந்து நிறைவு மலர்ந்த நாள். பாவங்களும் சாபங்களும் நீங்கி வாழ்வு மலர்ந்த நாள். இப்படி பல அனுபவங்களைக் கூறிக்கொண்டே போகலாம். வெட்டி மறையும் மின்னலைப்போல 11 மாதங்களைக் கடந்து 12வது மாதத்திற்குள் கடந்து வருகின்றோம். மீண்டும் ஒரு பண்டிகைக் காலத்தின் மகிழ்ச்சி வெள்ளத்தில் பயணித்திட நமக்கு ஓர் நல்வாய்ப்பு.

தேவனாலே கூடாத காரியம் ஒன்றுமில்லை லூக்கா 1:37

"Nothing is impossible for God." Luke 1:37

கடவுளின் ஆற்றலை வெளிப்படுத்தும் ஓர் உயரிய வசனம் இது. திருமறை வரலாற்றின் பல காலகட்டங்களில், பல்வேறு சூழல்களில் மனிதராலும், கடவுளாலும் பயன்படுத்தப்பட்ட சிறப்புக்குரிய ஓர் அனுபவ சொற்றொடர், தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை. இம்மாதத்தின் தியானப்பகுதியில் இந்த சிறப்புக்குரிய வாக்கியத்தை நாம் இணைந்து தியானிப்போம்.

1.படைப்பின் செயல்பாடுகளில் -In the process of creation (எரேமியா 32:17)

எரேமியா 32:17 இறை வசனத்தில், கடவுளின் அளப்பறிய ஆற்றல், அவர் தம் படைப்புகளில் வெளிப்பட்டிருப்பதை தீர்க்கதரிசியாகிய எரேமியா கண்டுணர்ந்து வெளிப்படுத்துகிறார். கடவுளின் உள்ளத்திலும், உணர்விலும், சிந்தையிலும் அவர் எண்ணியவைகள் அனைத்தையும் அவரது வார்த்தையின் வல்லமையினால் வடிவம் பெற்றதாக ஆதியாகமம் முதல் அதிகாரத்தில் நாம் வாசிக்கின்றோம். அந்த அனுபவத்தை சங்கீதம் 8-ல் தாவீது அரசனும் நினைவுகூறுவதை நாம் வாசிக்கலாம்.

“தேவனாலே கூடாத காரியம் ஒன்றுமில்லை” என்பதனை இறைவனது படைப்புகளை நாம் காணும்பொழுது கண்டு கொள்கின்றோம். மனிதன் எவ்வளவுதான் தன் அறிவினாலே செயற்கையாகப் பலவற்றை உருவாக்கினாலும், கடவுளின் ஆற்றலின் அருகே நெருங்கக்கூட

முடிவதில்லை. நமது வாழ்வின் பயணங்களில் ஆண்டவரின் படைப்புகளைக் காணும் பொழுதெல்லாம் “என் தேவனாலே கூடாத காரியம் ஒன்றுமில்லை” என்று மகிழ்ந்து கூறுவோம்.

**2. விசுவாசம் சிதைக்கப்படும் சூழல்களில் -In the faith shattering situation (ஆதியாகமம் 18:14):**

ஆபிராம்-சாராய் இருவரின் விசுவாசப் பாதையில் ஆண்டவருக்குக் கீழ்படிதலும், விசுவாசமும் முதன்மையானதாய் பார்க்கப்படுகிறது. அந்த விசுவாசமும், கீழ்படிதலும் தங்களுக்கு ஆண்டவராலே வழங்கப்பட்ட வாக்குத்தத்தம் நிறைவேற காலதாமதம் ஆகிக்கொண்டே செல்லுகின்ற சூழலில் அவர்கள் இருவரது விசுவாசமும் அசைக்கப்படுகிறது. சாராயின் விசுவாசமோ சிதைக்கப்படுகிறது. உடலியல் ரீதியாக இனி தனக்குப் பிள்ளை பெறும் வாய்ப்பே இல்லை என்று முடிவு கட்டியிருந்த அவளது வாழ்வில் “ஆண்டவராலே கூடாத காரியம் உண்டோ” என்று சாராயை புரிந்து கொள்ளவைத்து, முதிர்ந்த வயதில் அவர்களுக்கு ஈசாக்கை பிள்ளைச் செல்வமாய் அருளிச்செய்து ஆண்டவர் அவர்கள் விசுவாசத்தைப் பெருகச்செய்து ஆசீர்வதிக்கிறார்.

**3.மீட்பின் செயல்பாட்டில் - In the Redemptive Process (லூக்கா 1:37):**

மனுக்குலத்தை மீட்கும் கடவுளின் செயல்பாட்டிலும் இந்த திருவசனம் மையம்பெறுவதை லூக்கா 1:37-ல் நாம் காணலாம். கன்னிமரியாளை இயேசுவின் பிறப்பிற்காக ஆயத்தம் செய்யும் வேளையில், காபிரியேல் தூதன் இந்த நற்செய்தியைக் கூறும்பொழுது. திருமணத்திற்காக ஆயத்தமாகிக் கொண்டிருக்கும் மரியாள் அதிர்ந்துபோய், தூதன் சொல்வதெல்லாம் நடக்கக்கூடிய காரியங்களா? இது எப்படியாகும்? என்று தொடர் கேள்விக்கணைகள் தொடுக்கும் வேளையில் தூதன் உரைத்த இறைவார்த்தை “தேவனாலே கூடாத காரியம் ஒன்றுமில்லை”, அதற்கு மரியாளின் மறுமொழி, இதோ நான் ஆண்டவருக்கு அடிமை, உம்முடைய வார்த்தையின்படியே எனக்கு ஆகக்கடவது என்பதே.

இந்த கிறிஸ்மஸ் காலங்களில் நமது விசுவாசம் பெருகிட, கிருபைகள் தொடர்ந்திட நாமும் கூறுவோம் “தேவனாலே கூடாத காரியம் ஒன்றுமில்லை”.

திருச்சபை மக்கள் அனைவருக்கும் இனிய கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்.

ஆண்டவரின் அருட்பணியில்
உங்கள் ஆயர்
அருள்திரு.ஆ.விக்டர் பிரேம்குமார்.

# உதவி போதகர் மடல்

இவ்வுலகில் பாலகனாய் அவதரித்த இரட்சகர் இயேசுகிறிஸ்துவின் ஈடு இணையற்ற நாமத்தில் அனைவருக்கும் டிசம்பர் மாத வாழ்த்துக்களை அன்போடு தெரிவிக்கின்றேன். நவம்பர் மாதம் முழுவதும் நமக்குத் துணை நின்று வழி நடத்திய தேவாதி தேவனை நன்றியோடு துதிப்போம். இந்தப் பண்டிகை மாதத்திலும் கர்த்தர்தாமே நம்மோடு இருந்து நம்மை ஆசீர்வதித்து வழிநடத்துவாராக.

## தவற விடப்படும் செய்தி

1903-ம் வருடம் டிசம்பர் மாதம் 17-ம் தேதி, விமானத்தைக் கண்டுபிடித்த ரைட் சகோதரர்கள் முதன் முறையாகத் தாங்கள் உருவாக்கியிருந்த விமானத்தில் வரலாற்றில் முதன்முறையாக 59 வினாடிகள் பறந்தனர். இந்தச் செய்தியை தங்கள் சகோதரி கேத்ரினிடம் தெரிவிக்க எண்ணி "First sustained flight today. Fifty nine seconds. Hope to be home for Christmas". (முதன் முறையாக 59 வினாடிகள் பறந்துள்ளோம். கிறிஸ்மஸ்க்கு வீட்டுக்கு வருவோம்) என்று டெலிகிராம் அனுப்பினார். அதைப் பெற்றுக்கொண்ட கேத்ரின் மிகவும் மகிழ்ச்சியோடு அருகில் உள்ள பத்திரிக்கை அலுவலகத்திற்குச் சென்று அங்கு அந்த டெலிகிராமைக் கொடுத்து உடனே பிரசுரிக்கச் சொன்னாள். மறுநாள் பத்திரிக்கையில் "Popular local bicycle merchants home for the Christmas Holidays." (பிரபல சைக்கிள் வியாபாரிகள் கிறிஸ்மஸ் விடுமுறைக்கு வீட்டுக்கு வருகிறார்கள்) என்று செய்தி பிரசுரமாகியிருந்தது. அந்தப் பத்திரிக்கையின் எடிட்டர் வரலாற்றின் மிக முக்கியமான செய்தியான “மனிதன் முதன்முறையாகப் பறந்தான்” என்பதைத் தவறவிட்டுவிட்டார்.

அன்புக்குரியவர்களே! இப்படித்தான் நாமும் அநேக வேளைகளில் தேவையான, முக்கியமான, அவசியமான செய்தியைத் தவறவிட்டுத் தேவையற்ற, முக்கியமற்ற செய்தியையே ஏற்றுக் கொள்ளுகின்றோம். கிறிஸ்து நமக்காக, நம்முடைய இரட்சிப்புக்காகப் பிறந்தார் என்பதுதான் பிரதானமான செய்தி. பாவிகளை இரட்சிக்கவே கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்பதே பிரதானமான செய்தி. இதுவே உண்மையும் எல்லா அங்கீகரிப்புக்கும் பாத்திரமுமான செய்தியாகும் (1தீமோ.1:15).

ஆனால் இன்று அதனை மறந்து இயேசு கிறிஸ்து வெறும் உலக ஆசீர்வாதங்களுக்காகவும், உலக நன்மைகளுக்காகவும், சரீர சுகத்துக்கும் வந்ததாகவே விசுவாசிக்கிறோம், தேடுகிறோம். இயேசுகிறிஸ்துவும் இதனைச் சுட்டிக் காட்டுகின்றார். யோவான் 6:26-ல் ”நீங்கள் அப்பம் புசித்துத் திருப்தியானதினாலேயே என்னைத் தேடுகிறீர்களென்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்” என்கிறார்.

இன்று நாம் தவறவிடுகின்ற செய்தி என்ன? செய்யத் தவறுகின்ற விஷயங்கள் என்ன? குறிப்பாக இந்தப் பண்டிகைக் காலங்களில் பிரதானமான செய்தியான கிறிஸ்து நமக்காக, நமது இரட்சிப்புக்காகப் பிறந்தார். இதனை அனேகருக்கு எடுத்துரைக்க வேண்டும் என்பதனைவிட்டு, பண்டிகையை வெறும் கொண்டாட்டமாக எண்ணுகிறோம். ஏழை, எளிய மக்கள், பாவத்தில் உழலுகின்ற மக்கள், கிறிஸ்துவை அறியாத மக்களுக்கு கிறிஸ்துவின் அன்பை எடுத்துரைக்கும் அற்புதமான செயல்களில் நம்மை ஈடுபடுத்துவோம். நமது பண்டிகைக் கொண்டாட்டங்களில் ஏழை, எளிய மக்களை நினைவுகூறுவோம். கிறிஸ்துவை அறியாத பிற மத மக்களுக்கு அவரது பிறப்பை அறிவிப்போம். இதுவே பிரதானமான செய்தி. இதனைத் தவறவிடவேண்டாம்.

கர்த்தர் தாமே நம்மை ஆசீர்வதிப்பாராக.

கிறிஸ்துவின் பணியில்
அருட்திரு.ஜான் வெஸ்லி
உதவி ஆயர் - ∴.புஜைரா.

## NEW ARRIVALS

"பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்திரம்"
Sheldon Jeshuel Sam
S/o.Mr.Sam Magesh & Mrs. Shimona Jeffia Sam
14-10-2019

# உதவி ஆயரம்மா மடல்

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே!

பெத்தலையில் பிறந்த ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். கடந்த மாதம் முழுவதும் நம்மைக் கண்மணிபோலப் பாதுகாத்து நடத்தி வந்தார். இந்தப் புதிய மாதத்திலும் அவர்தாமே நம்மைப் பாதுகாத்து ஆசீர்வதித்து நடத்துவாராக.

## நமக்காக!

பெர்சியா தேசத்தை அரசாண்ட சிறப்பான மன்னர் ஒருவர் தன் மக்களைப்பற்றி அறிய எண்ணி, ஒருநாள் நள்ளிரவு வேளையில் சாதாரண குடியானவனைப்போல மாறு வேடமிட்டு கிராமம் ஒன்றிற்குச் சென்றார். அக்கிராமத்தைச் சுற்றிப்பார்த்து கடைசியில் ஒரு ஏழை விவசாயியின் குடிசைக்குச் சென்று அந்த விவசாயி உண்ணும் உணவை உண்டு, அவருடைய வீட்டில் சிறிது நேரம் இளைப்பாறிச் சென்றார். வந்தவர் அரசர் என்று அந்த ஏழை விவசாயிக்குத் தெரியாது. ஆனாலும் அவருக்கு இடம் கொடுத்து, உணவு கொடுத்து உபசரித்தார். மறுநாள் காலையில் அந்த விவசாயியின் வீட்டுக்குச் சென்ற அரசன், தான் முந்தைய இரவில் அவருடைய வீட்டுக்கு வந்ததாகக் கூறினார். மிக்க மகிழ்ச்சி அடைந்த விவசாயியிடம் அரசர், உனக்கு என்ன வேண்டுமானாலும் கேள், என்னை ஏற்றுக்கொண்டு உபசரித்த உனக்கு எது வேண்டுமானாலும் தருகிறேன் என்றார். விவசாயியோ எதையும் கேட்கவில்லை. அரசர் அவரிடம் உமக்கு ஒன்றும் வேண்டாமா என்றார். அதற்கு அந்த விவசாயி, “மன்னா, நீர் உம்முடைய அரண்மனையை விட்டு இந்த ஏழையின் வீட்டைத் தேடிவந்தீர், உம்முடைய ராஜ உணவை விட்டு இந்த ஏழையின் எளிய உணவை உண்டீர், உமது சொகுசுக்கட்டிலில் படுப்பதைவிட்டு என்னுடைய கயிற்றுக்கட்டிலில் படுத்தீர். இது வேறு எவருக்குமே கிடைக்காத பெரும் பாக்கியம். இதைவிட எனக்கு வேறென்ன வேண்டும்?” என்றார்.

அன்பானவர்களே! நம் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவும் நமக்காகத் தம் மகிமையை எல்லாம் துறந்து ஏழைக்கோலமானார். தேவனுக்குச் சமமாயிருந்த அவர் (பிலிப்பியர் 2:6) நம்மைப் போலவே மனிதனாகப் பிறந்து, நம்மைப் போலவே எல்லா உணர்வுகளையும் அனுபவித்தார். ஏழைகளின் இரட்சகராகவும், நலிவுற்றோருக்கு ஆதரவாகவும், சமூகத்தில் புறக்கணிக்கப்பட்டவர்களுக்கு அடைக்கலமாகவும், கட்டுண்டவர்களுக்கு விடுதலை அளிப்பவராகவும் இந்த உலகத்திற்கு வந்தார். இதுவே நமக்குக் கிடைத்த பெரும் பாக்கியம். இதுவே பெரும் ஆசீர்வாதம். இன்று நாம் எதனை வாஞ்சிக்கிறோம்? நமக்காக வந்த கிறிஸ்துவையா? அல்லது உலகப்பிரகாரமான ஆசீர்வாதங்களையா? நமக்காக நம்மைத் தேடிவந்த இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளுவோம். அவர் நம்மோடிருப்பாரானால் அவர் அருளும் அனைத்து ஆசீர்வாதங்களும் நமக்குச் சொந்தமாகும். இந்த பண்டிகை காலத்தில் ஆண்டவர் இயேசுவின் பிரசன்னத்தை அதிகமாய்த் தேடுவோம். இன்னும் ஆசீர்வாதம் பெறுவோம்.

உங்களுக்காக ஜெபிக்கும்
திருமதி. ஏஞ்சலின் ரூபா ஜான் வெஸ்லி
உதவி போதகரம்மா - ∴.புஜைரா.

## வருந்துகிறோம்

**"கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்"**

நமது சபையின் மூத்த முன்னாள் அங்கத்தினரான
Mr. D.R. Thomas அவர்களின் துணைவியாரும்,
நமது சபை அங்கத்தினர் Mrs.Carolin Cornelius அவர்களின் தாயாருமான
Mrs. Thelma Thomas அவர்கள் கடந்த 02-11-2019 அன்றும்
நமது சபை அங்கத்தினர்
Mrs. Ivy Russel அவர்களின் தகப்பனார்
Dr. M.Samuel Moses அவர்கள் கடந்த 17-11-2019 அன்றும்
கர்த்தருக்குள் நித்திரை அடைந்துள்ளார்கள்.

# உதவி போதகர் மடல்

இயேசுகிறிஸ்துவின் இனிதான திருப்பெயரில் அனைவருக்கும் வாழ்த்துக்கள். இவ்வருடத்தின் ஆரம்ப நாளிலிருந்து நம்மைப் பத்திரமாக நடத்திக் கொண்டிருக்கிற கர்த்தரைத் துதிப்போம்.

கிறிஸ்து பிறப்பு பண்டிகை காலத்தின் ஆராதனைகளிலும், சிறப்பு நிகழ்வுகளிலும் பங்கேற்க ஆயத்தப்பட கர்த்தர் அருள்புரிவாராக.

கர்த்தருடைய சத்தத்தை திருவசனத்திலிருந்து தியானிப்போம்.

தியான வசனம் : மத்தேயு 1:21

"அவள் ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக, ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார் என்றான்."

Matthew 1:21 "She will give birth to a son, and you are to give him the name Jesus, because he will save his people from their sins."

இயேசுகிறிஸ்துவின் பிறப்பு, கிறிஸ்துமஸ் பண்டிகையின் சிறப்பாகும். கடவுள் நம்முடன் இருக்கிறார் என்பதை நினைவூட்டும் காலம். யோவான் 1:14-ல் "அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும், சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம் பண்ணினார்." இச்செய்தி இன்று மானிடர்க்கு புதுவாழ்வின் நம்பிக்கையைத் தருகிறது. தொடர் வாழ்வை முன்னெடுத்துச் செல்ல ஊக்கமளிக்கிறது. இயேசுகிறிஸ்துவின் பிறப்பு மானிடர்க்கு காண்பிக்கிற செய்தியைத் தியானிப்போம்.

## 1.இயேசுவின் பிறப்பு: கடவுளின் நோக்கத்தைக் காண்பிக்கிறது.

## The birth of Christ shows us God's purpose. (Matthew 1:20-21)

வசனம் 20 "தாவீதின் குமாரனாகிய யோசேப்பே, உன் மனைவியாகிய மரியாளைச் சேர்த்துக்கொள்ள ஐயப்படாதே, அவளிடத்தில் உற்பத்தியாயிருக்கிறது பரிசுத்த ஆவியினால் உண்டானது."

மண ஒப்பந்தம் செய்து கொண்ட ஆணும் பெண்ணும், கணவரும் மனைவியும் ஆகின்றனர். அக்காலத்தில் மணமகள் ஒழுக்கம் தவறினால் அது விபச்சாரமாகக் கருதப்படும். சமூகத் தீமையாகக் கருதப்பட்டு கல்லெறிந்து கொலை செய்யப்படுவாள். மரியாள் தாய்மை அடைந்திருக்கிறாள். யோசேப்பு நீதிமானாக வாழ்ந்ததினால் மனித நேயத்தோடு சிந்தித்தார். மரியாள் தாய்மை அடைந்திருப்பது இறைத்திட்டத்தின் நிறைவேறுதல் என்பதை இறைத்தூதர் தெளிவுபடுத்துகின்றார்.

இயேசுகிறிஸ்து தனது நோக்கத்தைக் குறித்து கூறுகின்றார். மத்தேயு 20:28 "மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ்செய்யவும், அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்" என்றார்.

யோவான் 3:17-ல் “உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார்.”

இயேசுகிறிஸ்துவின் பிறப்பின் வாயிலாக கடவுள் மனுக்குலத்தின் தனது நோக்கத்தைக் காண்பிக்கிறார்.

### 2. இயேசுவின் பிறப்பு: கடவுளின் வாக்குறுதியைக் காண்பிக்கிறது.

The Birth of Christ shows us God's Promise. லூக்கா 1:29-37

தேவதூதன் மரியாளிடம் கடவுள் நிறைவேற்றப்போகிறதைக் கூறுகிறார். வசனம் 31,32.

> “நீ கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாய், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக.”
>
> “அவர் பெரியவராயிருப்பார், உன்னதமானவருடைய குமாரன் என்னப்படுவார்.”
>
> “கர்த்தராகிய தேவன் அவருடைய பிதாவாகிய தாவீதின் சிங்காசனத்தை அவருக்குக் கொடுப்பார்.”

யூதமக்கள் மேசியாவின் பிறப்பிற்காகக் காத்திருந்தனர். ஓவ்வொரு யூத தாய்மார்களும் தங்களுடைய மகன் மேசியாவாக இருக்கவேண்டும் என்று எண்ணி ஜெபித்தனர்.

2 கொரிந்தியர் 1:20-ல் “தேவனுடைய வாக்குத்தத்தங்களெல்லாம் இயேசு கிறிஸ்துவுக்குள் ஆம் என்றும், அவருக்குள் ஆமென் என்றும் இருக்கிறதே.” கடவுளின் வாக்குத்தத்தங்களெல்லாம் இயேசுகிறிஸ்துவில் நிறைவேறுகிறது. 1 யோவான் 2:25-ல் “நித்தியஜீவனை அளிப்பேன் என்பதே அவர் நமக்குச் செய்த வாக்குத்தத்தம்.” இயேசுகிறிஸ்துவால் மட்டுமே நித்திய ஜீவனை அருள இயலும். ஏனென்றால் அவர் மரணத்தை ஜெயித்தவர். பிதாவாகிய கடவுளால் வாக்குத்தத்தம் செய்யப்பட்டவர்.

நம் வாழ்வில் இயேசுகிறிஸ்துவின் அன்பையும், தியாகத்தையும் நினைத்து வாழ்வோம். இவ்வருடத்தின் கிறிஸ்து பிறப்பு பண்டிகை நாட்களும், வாழ்வில் எப்பொழுதும் இம்மானுவேலராக, கிறிஸ்து நம்முடனிருந்து நம்மை ஆசீர்வதிப்பாராக.

உங்கள் அனைவருக்கும் இராஸ் அல் கைமா திருச்சபை மக்கள் சார்பிலும், போதகராகிய எனது குடும்பத்தின் சார்பிலும் கிறிஸ்து பிறப்பு வாழ்த்துக்கள் தெரிவிக்கிறேன்.

கிறிஸ்துவின் திருப்பணியில்
Rev.M.Rajesh Kumar.
உதவி போதகர் - RAK.

# உதவி ஆயரம்மா மடல்

பாலகனாய் பெத்லெகேமில் பிறந்த இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் அனைவருக்கும் நல்வாழ்த்துக்கள்.

"இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார்" (லூக்கா 2:11)

இயேசுவின் பிறப்பு மனித இனத்திற்கே கிடைத்த மாபெரும் அதிசயம். பரிசுத்த ஆவியால் கன்னிமரியாளின் மகனாகப் பிறந்த இயேசு இன்றும் நம் மனதில் வாழ்ந்து வருகிறார். 1 கொரிந்தியர் 1:27-29 வசனங்களின்படி கிறிஸ்து பிறப்பு நாள் கடவுள் அடிமையின் வாழ்வை ஏற்று மனிதனாக தோன்றிய நாள். மனிதர்களின் பாவங்களை மன்னித்து மீட்பை அருளும்படி தோன்றிய நாள். மனித உள்ளங்களில் தோன்றிய தீய எண்ணங்கள் ஒழிக்கப்பட்டு அமைதியை உருவாக்கிய நாள். உலக வரலாற்றில் காலத்தை (கி.மு., கி.பி.) என்று இரண்டாகப் பிரித்த நாள். கிறிஸ்து பிறந்த நாள் நமக்கு உணர்த்துகின்ற செய்தியைத் திருமறை வசனங்களின் வழியாக அறிந்துகொள்வோம்.

1. இயேசுவின் பிறப்பினால் வாழ்வில் சமாதானம் (லூக்கா 2:14)

"உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனிதர்மேல் பிரியமும் உண்டாவதாக."

இயேசுகிறிஸ்துவின் பிறப்பினால் பூமியில் வாழ்கின்ற அனைவரும் சமாதானத்தைப் பெற்றுக்கொண்டனர். இயேசுவின் பிறப்பைக் குறித்து ஏசாயா தீர்க்கன் கூறும்போது, "அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக் கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப்பிரபு என்னப்படும்". (ஏசாயா 9:6b).

சுமாதானத்தைத் தருவதற்காகவே கிறிஸ்து இவ்வுலகில் பிறந்தார். உலகம் தராத சமாதானத்தை உங்களுக்குத் தருவேன் என்றும் உரைத்தார் (யோவான் 14:27). வாழ்வில் சமாதானமில்லாமல் வாழ்கின்ற ஒவ்வொருவருக்கும் இயேசுகிறிஸ்து சமாதானத்தை அருளுகிறார். கிறிஸ்து நம் உள்ளத்தில் பிறக்கும்போது உள்ளத்தின் பயங்கள் நீங்கி சமாதானம் ஏற்படும். ஆகவே கிறிஸ்துவின் பிறப்பின் செய்தி சமாதானமில்லாதிருக்கும் ஒவ்வொருவரின் உள்ளத்திலும், இல்லத்திலும் மற்றும் உலகளவிலும் சமாதானம் அருளும் செய்தியாகும்.

2. இயேசுவின் பிறப்பினால் வாழ்வில் மகிழ்ச்சி (லூக்கா 2:10,11)

"தேவதூதன் அவர்களை நோக்கி, பயப்படாதிருங்கள். இதோ எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன்."

"இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார்."

தூதரின் செய்தியைக் கேட்ட மேய்ப்பர்கள் உள்ளத்தில் பெரும்மகிழ்ச்சி ஏற்பட்டது. ஏனென்றால் ஆடுகளை மேய்ப்பவர்களை சமுதாயத்தில் புறக்கணிக்கப்பட்ட நிலையில் பார்க்கின்றார்கள். இவர்கள் படிக்காதவர்கள், பாமரர்கள் என்றும், ஏழைகள், எளியவர்கள் என்றும் ஒதுக்கி வைக்கும் நிலை காணப்படுகிறது. ஆனால் இயேசுவின் பிறப்பு மேய்ப்பர்களுக்கு முதலில் அறிவிக்கப்படுகிறது. இதனால் வாழ்வில் மகிழ்ச்சி ஏற்பட்டது. இந்த மகிழ்ச்சி இயேசுவின் பிறப்பினால் என்று அறியமுடிகிறது.

சமூக, அரசியல், சமய, பொருளாதார, கலாச்சார கருத்தியல் போன்றவற்றில் விடுதலையில்லாமல் இருந்த பாலஸ்தீன நாட்டின் மேய்ப்பர்களுக்கு விடுதலை அளிக்கும் இறைமகனாக பிறந்திருக்கிறார் என்பது மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்தியது. வாழ்வில் புறக்கணிக்கப்பட்டு ஒடுக்கப்படுகின்ற ஒவ்வொருவருக்கும் இயேசுவின் பிறப்பு மகிழ்ச்சியைத் தருகின்றது. இயேசுவின் பிறப்பினால் வருகின்ற மகிழ்ச்சியினை அனுபவிக்கும் மக்களாக தினமும் வாழ்வது சிறப்புக்குரியது.

ஆகவே இயேசுகிறிஸ்துவின் பிறப்பு வாழ்வில் சமாதானம் இல்லாமலும், மகிழ்ச்சி இல்லாமலும் இருப்பவர்களுக்கு புதுவாழ்வு தரக்கூடியதாகக் காணப்படுகிறது. நாம் நம்மைக் கிறிஸ்துவிடம் அர்ப்பணிக்கும்போது, சமாதானமும், மகிழ்ச்சியுமாக அவருக்குச் சான்று பகர்ந்து வாழ கர்த்தர் கிருபை செய்வாராக.

அனைவருக்கும் கிறிஸ்து பிறப்பு வாழ்த்துக்கள்.

கிறிஸ்துவின் பணியில்
திருமதி. J.விஜிலா ராணி
உதவி ஆயரம்மா - RAK.

# செயலர் மடல்

மனித அவதாரம் எடுத்து மனுக்குலத்தை மீட்கவந்த குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் உங்கள் அனைவருக்கும் கிறிஸ்மஸ் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்பண்டிகைக் காலங்கள் உங்கள் யாவருக்கும் ஆசீர்வாதமாக அமையுமென்று கிறிஸ்துவுக்குள் நம்புகிறேன்.

நவம்பர் மாதம் 15-ம் தேதி நமது திருச்சபையின் 40-ம் வருட அறுப்பின் சிறப்பு கொண்டாட்டத்தில் தேவன் கிருபையினாலே சபையார் அனைவரும் ஒருமித்த மனதுடன் மிகச் சிறப்பாகக் கொண்டாட தேவன் கிருபை செய்தார். இவ்விழாவில் 40 மற்றும் அதற்கு மேற்பட்ட வருடங்கள் அமீரகத்தில் வசித்து, நமக்கென்று CSI திருச்சபையை உருவாக்கிக் கொடுத்த அனைத்து மூத்த அங்கத்தினர்களுக்காக, ஆண்டவரை நன்றியோடு ஸ்தோத்தரித்து, இங்கிருப்பவர்கள் சிறப்பிக்கப்பட்டு, அறுப்பின் பண்டிகை கொண்டாட்டம் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. மற்றும் இவ்விழாவில் சிறுவர்கள் சிறப்பு காணிக்கைகளைப் படைத்து தேவனை மகிமைப்படுத்தினார்கள். மேலும் இதற்காக மிகவும் ஜெபித்து, உழைத்து, மிகவும் உதாரத்துவமாகக் கொடுத்த அனைவரையும் தேவன் அபரிமிதமாக நன்மைகளினாலே ஆசீர்வதிப்பாராக.

நவம்பர் மாதம் 25-ம் தேதி முதல் 30-ம் தேதி வரை நம் திருச்சபையின் வருடாந்திர எழுச்சிக் கூடுகை (Annual Convention) நமது சபையிலும், நமது கிளைச்சபைகளிலும், 15 ஆண்டுகளுக்குட்பட்ட திருமணத் தம்பதிகள் மத்தியிலும், 30-ம் தேதி தியான முகாமிலும் ஆலயத்தில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. அதில் சிறப்புச் செய்தியாளர்களாக Rev.பால் பிரான்ஸிஸ் மற்றும் அவரது துணைவியார் Rev.இந்திரா பால் அவர்களும் திருச்சபையின் பல்வேறு குழுவினருக்கும் தேவசெய்தி கொடுத்து நம் திருச்சபையின் அங்கத்தினர்களை ஆவிக்குள்ளாக மிகவும் சிறப்பாக உற்சாகப்படுத்தினார்கள். அவர்களுக்குத் திருச்சபையின் சார்பாக என் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த டிசம்பர் மாதத்தில் நடைபெறவிருக்கும் அனைத்து நிகழ்வுகள் மற்றும் கொண்டாட்டங்களுக்காகவும், நம் திருச்சபைக்காகவும், திருச்சபையின் அனைத்து ஊழியங்களுக்காகவும் உங்கள் தனி மற்றும் குடும்ப ஜெபங்களில் ஊக்கமாக ஜெபிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இரட்சகராக மனுவுரு எடுத்து நம்மை மீட்டெடுத்த நம் கிறிஸ்து இயேசுவின் இனிய நாமத்தில் உங்கள் அனைவருக்கும் மீண்டும் எனது கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டு 2020 நல்வாழ்த்துக்கள் கூறுவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

Babu Jeyaseelan, Secretary.

# கிறிஸ்மஸ் மரம்

### கிறிஸ்தவர்களுக்கும் கிறிஸ்மஸ் மரத்திற்குமுள்ள சம்மந்தம் என்ன?

கிறிஸ்மஸ் மரம் கிறிஸ்மஸ் திருநாள் கொண்டாட்டத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றது. பொதுவாக பசுமை மாறாத ஊசியிலை கூம்பு மரங்கள் வீட்டிற்குள்ளேயோ, அல்லது வெளியிலேயோ நிறுத்தப்பட்டு வண்ண வண்ண விளக்குகளாலும், மற்றும் அழகு பொருட்களாலும் அழகூட்டப்படுவது வழக்கமாகிவிட்டது. இதற்கும் கிறிஸ்தவர்களுக்கும் உள்ள தொடர்பு தான் என்ன? அலசிப்பார்ப்போமா?

இம்மரம் பொதுவாக குளிர்காலங்களில் பல நகரங்களில் பொதுவான காட்சியாக காணப்படும். Britain-ல் பல நூற்றாண்டுகளுக்கு முன் பச்சை இலைகளையும், கொம்புகளையும் வாசல்களில் தொங்கவிட்டால் தீய ஆவிகள் அணுகாது என்னும் நம்பிக்கை ஆழமாக இருந்தது. Germany-யே கிறிஸ்மஸ் மரத்தின் பிறப்பிடம் என்னும் சிறப்பைப் பெறுகிறது. சுமார் 1000 ஆண்டுகளுக்கு முன்னர் புனித போனிபேஸ் என்பவர் ஜெர்மனியில் கிறிஸ்தவ மத போதனைகளைச் செய்து கொண்டிருந்தபோது அங்குள்ள மக்கள் ஓக் மரம் ஒன்றை வழிபடுவதைக் கண்டார். அதைக்கண்டு கோபமடைந்த அவர் அந்த மரத்தை வெட்டி வீழ்த்த அதனடியிலிருந்து உடனடியாக ஒரு கிறிஸ்மஸ் மரம் முளைத்ததாக கூறப்படுகிறது. இந்த மரம் முளைத்த செயலை இயேசுவின் உயிர்ப்போடு தொடர்புபடுத்தி தன்னுடைய கிறிஸ்தவ போதனையை மும்முரப்படுத்தினார் அவர். ஆனால் கிறிஸ்மஸ் மரம் கொண்டாட்டங்களில் பயன்படுத்தப்படவில்லை. இவர்கள் தான் மரத்தை வீட்டிற்குள் அநுமதித்த பெருமையும் பெற்றவர்கள். 12ஆம் நூற்றாண்டுகளில் கிறிஸ்மஸ் மரங்களை தலைகீழாகக் கட்டி விழாக்களில் பயன்படுத்தியுள்ளனர்.

15ஆம் நூற்றாண்டில் மார்டின் லூத்தர் கிங், ஒரு கிறிஸ்மஸ் கால பனி நாளில் பனிபடர்ந்த சாலை வழியாக நடந்து செல்கையில் சிறு சிறு பச்சை மரங்களின் மீது படர்ந்திருந்த பனி, வெளிச்சத்தில் பிரமிக்கவைக்கும் அழகுடன் ஒளிர்வதைக் கண்டார். உடனே ஒரு ஃபிர் மரத்தை மெழுகுவர்த்திகளால் அலங்கரித்து அதை கிறிஸ்து பிறப்பாக கொண்டாடினார். கிறிஸ்மஸ் மரங்கள் அலங்காரங்களுடன் விழாக்களில் நுழைந்தது இப்போது தான் என்பதே அறியப்படும் செய்தி.

அதுமட்டுமல்லாது 15 ஆம் நூற்றாண்டில் டிசம்பர் மாதம் 24 ஆம் நாளை ஆதாம் ஏவாள் தினமாக கொண்டாடும் வழக்கம் இருந்து வந்தது. விலக்கப்பட்ட கனியை தின்றதால் ஆப்பிள் போன்ற பழங்களால் அலங்கரித்து அந்த நாளை கொண்டாடி வந்துள்ளனர் என ஆதாரபூர்வமாக அறியப்படுகிறது. இதுவே கிறிஸ்மஸ் மரமாக மாறியது என்றும் பல ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றார்கள்.

Paris-ல் 1521 ஆம் வருடம் பிரான்ஸ் இளவரசி Helina தனது திருமணத்திற்குப் பிறகு ஒரு கிறிஸ்மஸ் மரத்தை பாரீஸ் நகருக்கு கொண்டுவந்து விழா கொண்டாடியதே கிறிஸ்மஸ் மரம் நுழைந்ததன் முதல் நிகழ்வாக வரலாறு குறித்து வைத்திருக்கிறது. 18-ஆம் நூற்றாண்டுகளில் Germany, France, Australia போன்ற நாடுகளில் கிறிஸ்மஸ் மர அலங்காரம் வெகுவாக பரவி விட்டது.

England அரசி விக்டோரியா ஜெர்மனி நாட்டு இளவரசர் ஆல்பர்ட்டை திருமணம் செய்து கொண்டு இங்கிலாந்து திரும்பிய போது வின்செஸ்டர் மாளிகையில் சிறு சிறு கைவினைப் பொருட்களால் அலங்கரிக்கப்பட்ட கிறிஸ்மஸ் மரத்தை வைத்து விழா கொண்டாடினர். இதன் பின்னர் இம்மரம் கொண்டாட்டங்களில் இடம்பெறத் தொடங்கியது.

America-வில் 17 ஆம் நூற்றாண்டில் ஜெர்மனியிலிருந்து குடியேறிய மக்களால் இது அறிமுகப்படுத்தப்பட்டாலும் இது பிரபலமடையவில்லை. 1830 ஆம் ஆண்டு ஒரு கிறிஸ்மஸ் மரம் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தது. அதுவே மக்களை வெகுவாக ஈர்த்தது. அதன்பின் சுமார் 20 ஆண்டுகளுக்குப் பின்னரே ஒரு கிறிஸ்மஸ் மரம் ஆலய வழிபாட்டின்போது ஆலயத்தின் வெளியே வைக்கப்பட்டது. அதன்பின்னரே இது வெகுவாக பரவ முக்கிய காரணமாயிற்று. இங்கிலாந்தில் சுமார் 4 அடி உயரமுள்ள மரங்களை பயன்படுத்தினார்கள். ஆனால் அவர்களிடமிருந்து வித்தியாசமாக தெரியவே வீட்டு கூரை வரை உயரமுள்ளதாக ஆக்கிக் கொண்டார்கள்.

Canada, America-வின் எல்லா மாநிலங்களிலும் இம்மரங்கள் வளர்க்கப்படுகின்றன. சுமார் 1 இலட்சம் பணியாளர்கள் இம்மரவளர்ப்புப் பணியில் ஈடுபடுகின்றனர். Korea, Taiwan, Hong Kong போன்ற நாடுகள் செயற்கை மர தயாரிப்பில் ஈடுபட்டு முன்னணியில் நிற்கின்றன. இயற்கையை எழிலை மாசுபடுத்தாமலிருக்க இயற்கை மரங்களைவிட செயற்கை மரங்களை வாங்குவதை வழக்கமாக கொள்ளவேண்டும் என்று பலர் கருத்து தெரிவிக்கின்றார்கள்.

கிறிஸ்மஸ் மரத்தின் கிளைகள் சிலுவையின் அடையாளத்தைக் கொண்டிருப்பது கிறிஸ்மஸ் மரத்தின் சிறப்பம்சம். அதைப்போல கிறிஸ்மஸ் மரத்தின் முக்கோண வடிவம் தந்தை, மகன், தூய ஆவியர் ஆகிய மூன்று பரிமாணங்களைக் குறிப்பதாகவும் உள்ளது. எனவே இயேசு உருவான நாளை மரத்தை அலங்கரிப்பதன் மூலம் கொண்டாடுவது அதிக அர்த்தமுடையது என்றும் கிறிஸ்தவ விளக்கங்கள் பரிமாறப்படுகின்றன.

சிந்திப்போம்! திரித்துவ கடவுளாம் நம் தேவனை நினைவுப்படுத்திக் கொண்டிருக்கும் கிறிஸ்மஸ் மரங்கள் நம் இல்லங்களுக்கு மட்டுமல்ல நம் மனங்களுக்கு புத்தெழுச்சியை கொடுக்கட்டும்.

தொகுப்பு: ஷீபா ரெஜினால்ட்

பெத்தலை ஓரம் சத்திரம் சாரும்
நித்திரைத் தொழுவில் முத்திரைப் பிறப்பாம்
உச்செனும் இரவில் நச்செனும் உரையில்
நற்செய்தி ! பயப்படாதீர் !! ரட்சகர் பிறந்தார் !!!

தெரிந்த வானில் விரிந்த ஒளியில்
மந்தை மேய்ப்பர் சிந்தை பயத்தில்
மிரண்ட பார்வை வறண்ட நாவில்
சுரந்த அமுதம் காபிரியேல் செய்தியால்

இயேசு பிறந்து தூசு பறத்தும்
மாசறும் மனமும் நேசரும் துதியும்
பயனும் பாராட்டும் பேசிப்பேசி மாளாதாம்
பேசல யானாலும் பாவிமனம் கேழாதாம்

மண்ணவர் இணைக்க விண்ணவர் இசைக்க
பண்ணும் பாட்டும் போற்றும் புகழும்
விண்ணொலி மண்வழி கிண்கிணி கணீருங்க
விண்ணுறவும் மண்ணுறவும் தங்கிறைவும் முதன்முதலாம்

ஈராயிரம் ஆண்டுகள் நூறாயிரம் அனுபவங்கள்
தேறுதலும் ஆறுதலும் தீராஙல் திரவியங்கள்
ஊரெலாம் உணர்நிலைக்குள் பாரெலாம் பரவசத்துள்
யார்யாரோ இணைகைகள் இறைமகனார் தொழுகைக்குள்

நட்சத்திரங் கண்டு நற்செய்தி கொண்டு
கீட்திசை சாத்திரிகள் மேத்திசை விரைந்து
ஒட்டகத்தில் காணிக்கை கிட்டத்தில் வைத்து
தேடிய பாதையை வால்நட்சத்திரம் காட்டியது

வாழ்ஒளி இயேசுவை வாழ்த்துது வையகம்
வாய்ப்பாட்டு வாணரெல்லாம் வழிபாட்டில் நிச்சயம்
கீட்திசை மேத்திசை சூழ்திசை நீள்அதிர்விலாம்
கீதம் ஓதும் கீர்த்தி வீரியம்.

பொருள்: 1. சாரல்–சேரல்–உரிய.
2. சாத்திரி–சாஸ்திரி.
3. வாணர்–வாழ்பவர்.

ஆதாரம் : மத்தேயு அதிகாரம் 2
லூக்கா அதிகாரம் 2
உலக நடப்புகள்

கவிதை எண் : 224

கவி புனைவு : மணிமுத்து.

திருமணம் முடித்து முதல்முறையாக ஆலயத்திற்கு வரும் தம்பதிகளும், குழந்தை பிறந்தபின்பு முதல்முறையாக குழந்தையை ஆலயத்திற்குக் கொண்டுவரும் பெற்றோரும் தயவுசெய்து முன்னதாக போதகருக்குத் தெரியப்படுத்திவர கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

## வாழ்த்துகிறோம்

கர்த்தருடைய கிருபையால்
நவம்பர் மாதம் 1-ம் தேதி
பரிசுத்த மெய் விவாகத்தின் மூலம்
குடும்பமாக இணைக்கப்பட்டுள்ள
Mrs.Priscilla Solomon & Mrs.Dass Prakash Yesubatham
இவர்களை திருச்சபையாக வாழ்த்துகிறோம்.

# நீங்கள் கிறிஸ்தவரா...

ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும்,
நீர் அனுப்பினவராகிய இயேசுகிறிஸ்துவையும்
அறிவதே நித்திய ஜீவன். யோவான் 17:3

சென்ற இதழ் தொடர்ச்சி
இயற்கை
வளமும்
கண்ணுக்கு
இனிய
காட்சியும்
இதயம் மகிழும்
இதமான
சொந்தமும்
பந்தமும்
சூழ்ந்து
மகிழ்ந்திருக்க...
கர்த்தராம்
கடவுளை
போற்றித் துதிக்க
வாழ்த்தி வணங்க
படைக்கப்பட்ட
மனிதன்...
காலப்போக்கில்
கடவுளாம்
கர்த்தரை
மறந்து
தர்மம்
குலைந்து
அதர்மம்
பூமியில்
ஆட்சி செய்தபோது
உலகைக் காக்க
அஞ்ஞானம் நீக்க
பாவத்தைப் போக்க
பிதாவே... தனது
ஒரே மைந்தர்
இயேசுவை
மனிதராக
பூவுலகில்
அவதரிக்கச்
செய்தார்.
அன்பின்
ஆண்டவராம்
இயேசுவையும்
அவர் தம்
போதனையும்
அறிந்து...
இயேசுவை
பற்றற்று பற்றும்
பரம பக்தனாக
வாழ்வதே... நமது
நித்திய ஜீவன்
மகனே கேள்...
எந்த அரசும்
எந்தவித
மத கோட்பாடும்
உலக ரட்சகர்
உன்னத தந்தை
இயேசுவிடம்
நமக்குள்ள
பக்தியை
சேவையை
தடைபோட
முடியுமா...
முடியாதுதானே
முயன்று
பார்த்தவர்கள்
முடிவில் காண்பது
தோல்விதானே...
உலகம்
மகிழ்வில்
மகிழும்
இன்றைய
கிறிஸ்மஸ்...
வரம் வாரி
வழங்கும்
வள்ளல்
இயேசுவின்
கருணையால்...
நாடுகளுக்கு
இடையே வரும்
வம்புகள்
வழக்குகள்
மறையட்டும்
அன்பும்
ஒழுக்கமும்
நிறையட்டும்
நம் ஒவ்வொரு
குடும்பத்திலும்
சாந்தியும்
சமாதானமும்
நிலைக்கட்டும்
எந்த நிலையிலும்
நிலைகுலையா
மலையளவு
முழுநம்பிக்கையுடன்
இயேசுவை
துதிப்போமே...
தூயவரை
ஜெபிப்போமே....
இனி காண்பது
ஜெயமே...
கிறிஸ்மஸ்
இனிய
நல்வாழ்த்துக்கள்.

என்றும் அன்புடன், T. ராஜ்குமார். Mens Fellowship.

# இம்மகிழ்ச்சி மாத சிறப்பு நிகழ்ச்சிகள்!

| | | | |
|---|---|---|---|
| துபாய் | 09-12-2019<br>திங்கள் | இரவு<br>08:00 மணி | சிறுவர், பாடகர் குழுவின் கிறிஸ்துமஸ் பாடல் ஆராதனை, St. Paul's Hall. |
| | 13-12-2019<br>வெள்ளி | மாலை<br>04:30 மணி | கிறிஸ்துமஸ் மர விழா<br>Bilva Indian School, Al Qusais. |
| | 25-12-2019<br>புதன் | அதிகாலை<br>04:00 மணி | கிறிஸ்துமஸ் பண்டிகை<br>பரிசுத்த திருவிருந்து ஆராதனை<br>St. Paul's Hall. |
| | 31-12-2019<br>செவ்வாய் | நள்ளிரவு<br>11:00 மணி | ஆண்டு முடிவு-புதுவருட பண்டிகை<br>உடன்படிக்கைத் திருவிருந்து<br>ஆராதனை, St. Paul's Hall. |
| ஃபுஜைரா | 13-12-2019<br>வெள்ளி | மாலை<br>6:30 மணி | கிறிஸ்துமஸ் மரவிழா<br>கிறிஸ்துமஸ் பாடல் ஆராதனை |
| | 24-12-2019<br>செவ்வாய் | நள்ளிரவு<br>12:00 மணி | கிறிஸ்துமஸ் பண்டிகை<br>பரிசுத்த திருவிருந்து ஆராதனை |
| | 01-01-2020<br>புதன் | அதிகாலை<br>04:30 மணி | புதுவருட பண்டிகை<br>உடன்படிக்கை ஆராதனை<br>பரிசுத்த திருவிருந்து ஆராதனை |
| இராஸ் அல் கைமா | 13-12-2019<br>வெள்ளி | மாலை<br>06:00 மணி | கிறிஸ்துமஸ் மர விழா<br>கிறிஸ்துமஸ் பாடல் ஆராதனை |
| | 25-12-2019<br>புதன் | இரவு<br>07:30 மணி | கிறிஸ்துமஸ் பண்டிகை ஆராதனை<br>பரிசுத்த திருவிருந்து ஆராதனை |
| | 31-12-2019<br>செவ்வாய் | இரவு<br>11:00 மணி | புதுவருட பண்டிகை<br>உடன்படிக்கை ஆராதனை<br>பரிசுத்த திருவிருந்து ஆராதனை |

## கண்ணீர் துருத்தி - Tear Bottle



சங்கீதம் 56:8 சொல்கின்றது, என் அலைச்சல்களை தேவரீர் எண்ணியிருக்கிறீர். என் கண்ணீரை உம்முடைய துருத்தியில் வையும். அவைகள் உம்முடைய கணக்கில் அல்லவோ இருக்கிறது. 'Put my tears into Your bottle' What is a tear bottle?

கண்ணீர் துருத்திகள் எங்கிருந்து வந்தன என்பதைச் சரியாக சொல்வது கடினம் என்றாலும், பழங்கதைகளின் வாயிலாக நாம் ஒருவாறு அறிந்துகொள்ள முடியும். கண்ணீர் துருத்திகள் உரோமர்களின் காலத்தில் தாராளமாக உபயோகத்தில் இருந்துள்ளது. ஒருவரது இறுதிச் சடங்கின்போது கண்ணீர் வடிப்பவர்கள் சிறு கண்ணாடிப் புட்டிகளை கண்ணீரால் நிரப்பி, அவர்களது கல்லறையின் அருகில் வைப்பது ஒரு மரியாதைக்குரிய செயலாகக் கருதப்பட்டது. இப்படி கண்ணீரைச் சேமிப்பதற்காக சில சமயங்களில் சில பெண்களை பணத்திற்கு அமர்த்துவதும் உண்டு. எல்லாக் கல்லறைகளிலும் இக்கண்ணீர் துருத்திகளை காண்பது அரிது. ஆனால் செல்வந்தர்களின் கல்லறைகளில் அதிகமாகக் காணலாம். எகிப்தை ஆண்ட பார்வோனின் கல்லறையிலும் நூற்றுக்கணக்கான இச்சிறு புட்டிகள் காணப்பட்டது.

இன்று கண்ணீர் புட்டிகள் கண்ணாடியில் செய்யப்பட்டாலும் அன்று இக்கண்ணீர் புட்டிகள் களிமண்ணினால் செய்யப்பட்டது. மிருகங்களின் தோல்களினாலும் செய்யப்பட்ட பெரிய அளவிலான துருத்திகள் திரவப் பொருட்கள் எடுத்துச்செல்ல பயன்பட்டது.





மறக்கப்பட்ட இந்த கண்ணீர் துருத்திகள் மீண்டும் பத்தொன்பதாம் நூற்றாண்டில் மறுபடியும் வலம் வர ஆரம்பித்தது. இப்படி சேகரிக்கப்படும் கண்ணீரானது அதற்கென விசேஷமாக அமைக்கப்பட்ட அடைப்பான்களால் அடைக்கப்பட்டு அக்கண்ணீர் துளிகள் நீராவியாக மாற வழிசெய்யப்படும். அது முழுதுமாக நீராவியாக மாறிவிடும்போது அந்த துக்க நாட்கள் முடிந்துவிட்டதாக முடிவுசெய்வர்.

அமெரிக்காவில் உள்நாட்டு போர் நடைபெற்ற போது, போருக்குச் சென்ற தங்கள் கணவரின் வருகைக்காகக் காத்திருக்கும் பெண்கள் இக்கண்ணீர் துருத்திகளில் தங்களின் கண்ணீரை சேகரித்து வைத்தனர். அவர்கள் சேகரித்த கண்ணீர் சொல்லும், அவர்கள் தங்கள் கணவரை எவ்வளவாய் பிரிந்தனர் என்றும் எவ்வளவாய் தவித்தனர் என்றும் நம்பினர்.

இந்த கண்ணீர் துருத்தி வரலாற்றில் துக்க அனுஷ்டித்தலோடு தொடர்புடையதாக கூறப்பட்டுள்ளது. தற்போதைய இசை மற்றும் இலக்கியத்தில் இக்கண்ணீர் துருத்திகள் மீண்டும் நிலுவைக்கு வந்துள்ளது. தற்பொழுதுள்ள காணொளிகள், நாவல்கள் மற்றும் கவிதைகளில் இக்கண்ணீர் துருத்திகள் மீண்டும் புத்துயிர் பெற்றுள்ளது. இதை தற்பொழுது tear bottle, tear catcher, tear vial, unguentaria, unguentarium என பல பெயர்களில் வழங்கப்படுகின்றது. இன்று கண்ணீர் பாட்டில்கள் உணர்வுகளின் அடையாள அன்பளிப்பாக பயன்படுத்தப்படுகின்றன. திருமணங்கள் மற்றும் பிறந்த நாட்கள் போன்ற மகிழ்ச்சியான தருணங்கள், அத்துடன் துக்கம் மற்றும் இழப்பு போன்ற பல நிகழ்வுகளில் பயன்படுத்தப்படுகின்றது. வருத்தமான நேரங்களில் நமது உணர்வுகளை பகிர்ந்து கொள்வதற்கு மிக சரியான பரிசாக இது காணப்படுகிறது.

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, நாம் தேவ சமுகத்திலே வடிக்கும் கண்ணீரை நாம் ஒருவேளை மறந்துபோகலாம். ஆனால் நம் அருமை இயேசு நாதர் நம்முடைய கண்ணீரை அவருடைய துருத்தியிலே கணக்கு வைத்திருப்பவர். நம்முடைய அழுகைக்கு அவர் மனமிரங்காமல் போய்விடுபவர் அல்ல. அவர் நிச்சயமாக நமக்குப் பதில் கொடுப்பார். கலங்காதீர்கள். வெகுநாட்கள் காத்திருப்பது இருதயத்தை இளைக்கப்பண்ணும். ஆனால் விரும்பினது வரும்போதோ அது ஜீவ விருட்சம் போலிருக்கும். நம் தேவன் நம் கண்ணீரின் ஜெபத்திற்குப் பதில் தருவார். ஆமென்.

தமிழாக்கம், தொகுப்பு: ஷீபா ரெஜினால்ட்

# திருச்சபை ஜெபநாள் 01-12-2019 (முதல் ஞாயிறு)

"கர்த்தாவே, உம்மை நோக்கிக் கூப்பிட்டேன்,
நான் வெட்கப்பட்டுப் போகாதபடி செய்யும்." சங்கீதம் 31:17

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, "திருச்சபை ஜெபநாளில்" பங்கு பெற்றுத் தொடர்ந்து ஜெபித்துவரும் ஒவ்வொரு குடும்ப அங்கத்தினர்களுக்கும், சபையின் சார்பில் நன்றி கூறுகின்றோம். தொடர்ந்து மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமை தோறும், ஜெபக் குழுக்களிலும், மற்றும் தினந்தோறும் ஜெப நேரம் ஒதுக்கி, ஜெபித்துத் திருச்சபைத் திருப்பணிகளைத் தாங்குங்கள். தேவ ஆசீர்வாதம் உங்களோடிருப்பதாக.

## துதிகள்

- கர்த்தர் நமக்குத் தந்தருளிய சரீர சுகம், பெலம், ஜீவனுக்காக, திருச்சபை மூலமாக நாம் இம்மட்டும் பெற்றுக்கொண்ட ஐக்கியம் மற்றும் ஆன்மீக நன்மைகளுக்காக நன்றி கூறுவோம்.
- தேவன் நம் ஜெபத்தைக் கேட்டு நம் மத்தியில் பிரசன்னராயிருந்து, நம்மைத் தாங்கி பெலப்படுத்தியமைக்காக ஸ்தோத்திரம் கூறவோம்.
- நமது ஸ்தோத்திரப்பண்டிகை ஆராதனை, வருடாந்திர நற்செய்திக் கூட்டங்கள், வாலிபர் தியான முகாம் யாவும் சிறப்பாக நடைபெற கர்த்தர் அருளின கிருபைகளுக்காக அவரைத் துதிப்போம்.

## திருச்சபை திருப்பணிகளுக்கான ஜெப வேண்டுதல்கள்

- நம் குருவானவர்கள், சபை ஊழியர், மற்றும் அவர்களுடைய குடும்பத்தினருக்காக, திருப்பணிகளுக்காக,
- நம் திருச்சபையின் முன்னாள் குருவானவர்கள், அவர்கள் குடும்பத்தாருக்காகவும், ஆரோக்கியத்திற்காகவும்,
- நம் திருச்சபைகளைச் சேர்ந்த திருச்சபையினர் அனைவருக்காகவும், ஆங்காங்கே நடைபெறும் ஆராதனைகள், ஊழியங்கள், சிறுவர், வாலிபர், ஆண்கள், பெண்கள் மத்தியில் நடைபெறும் சிறப்பு ஊழியங்கள் மற்றும் முகாம் ஊழியங்களுக்காக,
- திருச்சபை மக்களுடைய நல்லுறவு பெலப்பட ஏதுவான நம் ஆன்மீக வளர்ச்சிக்காக,
- திருச்சபையின் நிர்வாகக்குழு அங்கத்தினர்களுக்காகவும், தேவ சித்தம் நிறைவேற்றும் வகையில் அவர் தம் பணிகளுக்காகவும்,
- திருச்சபைப் பணிகளை ஜெபத்தோடு உற்சாகமாகவும், உதாரத்துவமாகவும் தாங்கி வரும் திருச்சபை மக்களுக்காக,
- சிறுவர் வேதபாடசாலைத் திருப்பணிகளில் அர்ப்பணிப்போடு பங்கு பெறும் தேவபிள்ளைகளுக்காக, பயன்பெறும் நம் குழந்தைகளின் இறைபக்திக்காக,
- நமது திருச்சபையின் ஜெபக்குழுக்களுக்காக, ஐக்கிய, ஆன்மீக வளர்ச்சிக்காக, மிஷனரி ஊழியங்களுக்காக, தாங்கும் திருச்சபை மக்களுக்காக, மற்றும் மிஷனரி ஸ்தாபனங்களுக்காக

- தென்னிந்தியத் திருச்சபைக்காக, அனைத்துப் பேராயங்கள், நமது பேராயர்கள், குருவானவர்கள், திருப்பணியாளர் அனைவருக்காகவும், திருப்பணிகளுக்காக
- கொளகூர் மாதிரி கிராமத்தில் அமைத்துள்ள மருத்துவமனை ஊழியங்களுக்காக ஜெபிப்போம்.

## நாட்டுக்காக ஜெப வேண்டுதல்கள்

- இந்திய நாட்டுக்காக, நாட்டின் தலைவர்கள் மற்றும் அதிகாரம் வகிப்போர் அனைவருக்காகவும், தேசத்தின் வளத்துக்காகவும், வளர்ச்சிக்காகவும், மனிதநேயமும், மத நல்லிணக்கமும் பெருகவும் ஜெபிப்போம். நல்ல இயற்கைச் சூழ்நிலைகள், மழை வளத்துக்காக ஜெபிப்போம்.
- அரபு ஐக்கியக் குடியரசுக்காக, அதன் தலைவர்களுக்காக, இங்கு வாழும் அனைத்துமக்களின் சமாதானத்துக்காக,
- உலகத் தலைவர்களுக்காக, சமாதானத்துக்காக, உலகில் தேவ ஆளுகைக்காக

## நமது ஜெப மன்றாட்டுகள்

- இந்த மாதத்தில் தேவ வழிநடத்துதல்கள், தேவ ஆசீர்வாதங்களுக்காக, பாதுகாப்பு, பராமரிப்பு, சுகம், பெலம் ஆகிய தேவ கிருபைக்காக,
- நமது குடும்பங்களின் தேவைகளுக்காக, நமது பிள்ளைகளின் கல்விமுன்னேற்றம், மற்றும் ஆன்மீக வளர்ச்சிக்காக, வளமிகு எதிர் காலத்துக்காக,
- வேலை வாய்ப்புக்காய் காத்திருப்போருக்காக, விசா பிரச்சனைகளில் இருப்போருக்காக, சரீர சுகவீனங்களில் சிகிச்சை பெறுவோருக்காக,
- திருமணத்திற்காக தெய்வ வழிநடத்துதல் நாடுவோருக்காக, குழந்தை பாக்கியத் திற்காக ஜெபிப்போர், மற்றும் பிரசவ கால கட்டத்தில் இருப்போர் அனைவருக்கும் தேவ ஒத்தாசை, கிருபைக்காக, குடும்பங்களை விட்டுத் தனியே பணிக்காக வந்தவர்களுக்காக
- அனைத்து கல்வி, சமுதாய, மருத்துவ ஊழியங்களுக்காய் ஜெபிப்போம்
- பொருளாதார நெருக்கடியினால் வேலையில் ஏற்பட்டுள்ள பிரச்சனைகள் நீங்கவும், பாதிக்கப்பட்ட ஒவ்வொருவருடைய தேவைகள் சந்திக்கப்படவும்,
- குடும்பங்களில், வேலையிடங்களில் மன அழுத்தத்தோடு வாழும் மக்கள் நல்வாழ்வு பெற ஜெபிப்போம்.
- உலகின், இந்தியாவின், தமிழ்நாட்டின் அரசியல் நிலை சீரடைய ஜெபிப்போம்.
- நடைபெற இருக்கும் ஃபுஜைரா திருச்சபையின் ஸ்தோத்திரப் பண்டிகைக்காக ஜெபிப்போம்.
- நடைபெற இருக்கும் கிறிஸ்மஸ் பண்டிகை சிறப்பு நிகழ்ச்சிகள், பண்டிகை ஆராதனை யாவும் சிறப்பாக நடைபெற ஜெபிப்போம்.

"கர்த்தாவே, என் வார்த்தைகளுக்குச் செவிகொடும்,
என் தியானத்தைக் கவனியும்." சங்கீதம் 5:1

நமக்கென ஓர் ஆலயம் கட்டுவதற்கான இடவசதியும், பொருளாதார தேவைகளும் சந்திக்கப்பட சபையார் தங்கள் தனி ஜெபங்களிலும், குடும்ப ஜெபங்களிலும் ஊக்கமாக தொடர்ந்து ஜெபிக்க அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

# நட்சத்திரம்

“அநேகரை நீதிக்குட்படுத்துகிறவர்கள் நட்சத்திரங்களைப் போலவும் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் பிரகாசிப்பார்கள்”(தானி 12:3). கிறிஸ்து இந்த பூமியில் பிறந்த பொழுது கிறிஸ்துவை காணும்படி வந்த சாஸ்திரிகளை சரியான பாதையில் வழிநடத்தி கிறிஸ்துவண்டை கொண்டு சேர்த்தது நட்சத்திரம். இதை நினைவுகூறும் வண்ணமாக இந்த மாதத்தின் ஆரம்ப நாட்களிலிருந்தே கிறிஸ்தவர்களின் வீட்டின் முன்னால் ஸ்டார் தொங்கவிடப்பட்டிருக்கும். வழி தெரியாமல் தவித்த சாஸ்திரிகளை கிறிஸ்துவிடம் வழிநடத்திய இந்த நட்சத்திரம் கர்த்தருடைய நட்சத்திரம் என அழைக்கப்பட்டது. “கிழக்கிலே அவருடைய நட்சத்திரத்தைக் கண்டு, அவரைப் பணிந்து கொள்ள வந்தோம் என்றார்கள்” (மத். 2:2). இந்த நட்சத்திரத்தை போல நமது வாழ்க்கையின் மூலமாக பிறரை கிறிஸ்துவுக்கு நேராக வழிநடத்துகிறோமா என சிந்தித்து பார்ப்போம். நம்முடைய தேசத்தில் ஜீவனுள்ள தேவனைத்தேடி அநேகர் அலைந்து கொண்டிருக்கிறார்கள். “உலகத்திலே சுடர்களைப் போலப் பிரகாசிக்கிற நீங்கள்” (பிலி. 2:14) அவ்வாறு தேடி கொண்டிருக்கிற மனிதர்களை இயேசுவண்டை வழிநடத்த தேவனால் தெரிந்துக் கொள்ளப்பட்ட நட்சத்திரம் எனவும், “நீங்கள் உலகத்திற்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள் … உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது” (மத். 5:14-16) எனவும் கூறுகிறார்.

வானத்திலே கோடிக்கணக்கான நட்சத்திரங்களை கர்த்தர் வைத்திருந்தாலும், தன் குமாரனின் பிறப்பை உலகிற்கு அறிவிக்க விசேஷித்த ஒரு நட்சத்திரத்தை வைத்திருந்தார். நாமும் தேவனுக்காக படைக்கப்பட்ட விசேஷித்தவர்கள். “நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்” (1பேதுரு 2:9). நாம் தேவனுக்கு சொந்தமானவர்கள். இந்த பொல்லாத காலங்களிலே வாழ்ந்து கொண்டிருக்கிற நாம், காலத்தை அறிந்து செயல்பட அழைக்கப்பட்டிருக்கிறோம். அதுவரை மறைந்திருந்த நட்சத்திரம் இயேசுவின் பிறப்பின் போது வெளிப்பட்டது. “ஏரோது, சாஸ்திரிகளை இரகசியமாய் அழைத்து, நட்சத்திரம் காணப்பட்ட காலத்தைக் குறித்து அவர்களிடம் திட்டமாய் விசாரித்து” (மத். 2:7) என பார்க்கிறோம். ஆண்டவருடைய வருகை நெருங்கிக் கொண்டிருக்கிற இந்த காலத்திலே நாட்டிலே என்ன நடக்கின்றது என்பதை குறித்த விழிப்புணர்வு உள்ளவர்களாக, தேசத்திற்காக சபைக்காக ஜெபிக்கிறவர்களாக காணப்பட வேண்டும்.

